# சோதனை.

அன்பான சகோதர சகோதரிகளுக்கு, இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்.

*யாக் 1:12 சோதனையைச் சகிக்கிற மனுஷன் பாக்கியவான்; அவன் உத்தமனென்று விளங்கினபின்பு கர்த்தர் தம்மிடத்தில் அன்புகூருகிறவர்களுக்கு வாக்குத்தத்தம் பண்ணின ஜீவகிரீடத்தைப் பெறுவான்.*

*13 சோதிக்கப்படுகிற எவனும், நான் தேவனால் சோதிக்கப்படுகிறேன் என்று சொல்லாதிருப்பானாக; தேவன் பொல்லாங்கினால் சோதிக்கப்படுகிறவரல்ல, ஒருவனையும் அவர் சோதிக்கிறவருமல்ல.*

*14 அவனவன் தன்தன் சுய இச்சையினாலே இழுக்கப்பட்டு, சிக்குண்டு, சோதிக்கப்படுகிறான்.*

*15 பின்பு இச்சையானது கர்ப்பந்தரித்து, பாவத்தைப் பிறப்பிக்கும், பாவம் பூரணமாகும்போது, மரணத்தைப் பிறப்பிக்கும்.*

*16 என் பிரியமான சகோதரரே, மோசம்போகாதிருங்கள்.*

*17 நன்மையான எந்த ஈவும் பூரணமான எந்த வரமும் பரத்திலிருந்துண்டாகி, சோதிகளின் பிதாவினிடத்திலிருந்து இறங்கிவருகிறது; அவரிடத்தில் யாதொரு மாறுதலும் யாதொரு வேற்றுமையின் நிழலுமில்லை.*

சோதனை என்பது பல அருமையான விசுவாசிகளின் வாழ்க்கையில் ஒரு புரியாத புதிராக இருக்கிற விஷயம். அனைவரும் ஏதாவது ஒரு சோதனையில் அகப்பட்டுக்கொண்டே இருக்கிறார்கள். சோதனை பலரது வாழ்க்கையை அழித்துக்கொண்டிருக்கிறது. ஏறத்தாழ அனைத்து மக்களும், ஏதாவது ஒரு சோதனைக்குள் இருப்பதாகவே சொல்லுகிறார்கள். தங்கள் இலக்கை நோக்கி பயணம் செய்யும் பல வாழ்க்கை என்னும் மேகங்களும், இந்த சோதனை என்கிற மலையில் மோதி சிதைந்து போகின்றன. சோதனையும் வேதனையும் பனிக்கட்டியும் குளிரும் போல இணைந்து வந்து பலரது வாழ்க்கையில் கண்ணீர் ஆறுகளை ஓடச்செய்கின்றன. யார் இந்த சோதனைகளை அனுப்பி மனிதர்களை சோதிப்பது ? சிலர் சொல்வது **" தேவன் "**. இன்னலை அனுப்பி என்னை பொன்னாக புடமிடுகின்றார். சிலர் சொல்வது **' சாத்தான் '**. அனைத்து சோதனைகளுக்கும் அவனே காரணம். எது உண்மை ? வேதத்தை மேலோட்டமாக வாசித்து பார்க்கும்போது, சில வசனங்கள் ஒன்றுக்கொன்று முரண்பாடாக இருப்பது போல், மேற்குறிப்பிட்ட இரு சாராருக்கும் ஆதரவாக இருப்பது போல் தோன்றும். ஆனால் பரிசுத்த ஆவியானவரின் வழிநடத்துதலோடு படிப்போமானால், தியானிப்போமானால் அனைத்து உண்மைகளும் தெள்ளந்தெளிவாக புரியும். அப்படி வேத வசனம் சோதனையைப்பற்றி தெளிவாக சொல்லும் உண்மைகளை நாம் இப்போது பார்ப்போம்.

எந்த ஒரு விசுவாசியும் நான் " இனிமேல் தேவைப்படும்போது மாத்திரம் பாவம் செய்வேன் " என்று இருப்பதில்லை. அவருக்கு பாவத்தில் விழ வேண்டும் என்ற ஆசை இருப்பது இல்லை. ஆனாலும் அதற்கான சூழ்நிலை வரும்போது, பாவம் ஈர்க்கும்போது, சாத்தான் பலவிதமான காரியங்களை காட்டி சோதிக்கும்போது அதில் விழுந்து விடுகிறார். பிரசங்கிமார்களும், சபைகளும் எப்போதும் சொல்வது " பாவம் செய்யக்கூடாது ", " பாவத்தில் விழக்கூடாது ". " சோதனையில் வீழ்ந்து போகக்கூடாது " என்று. ஆனால் பலரும் " பாவம் செய்யாமல் இருப்பது எப்படி ? ", " பாவத்தில் விழாமல் இருப்பது எப்படி ?" " **சோதனையில் வீழ்ந்து போகாமல் இருப்பது எப்படி ? "** என்று வேத வசனங்களின் அடிப்படையில் சொல்லிக்கொடுப்பது இல்லை. மதம் எப்போதும் சொல்வது " இதை செய்யக்கூடாது, அதை செய்யக்கூடாது ". ஆனால் இயேசு கிறிஸ்து தன் வாழ்க்கையின் மூலமாக **" எப்படி செய்யாமல் இருப்பது " என்று செயல் முறையில் காண்பித்து தந்தார்.** இந்த வேதபடிப்பை நீங்கள் ஆழ்ந்து, தியானித்து படிப்பீர்களானால் " பாவம் செய்யாமல் இருப்பது எப்படி ? ", " பாவத்தில் விழாமல் இருப்பது எப்படி ?" " சோதனையில் வீழ்ந்து போகாமல் இருப்பது எப்படி ? " என்று தெளிவாக புரிந்து கொள்வீர்கள். அதனால் அடுத்த முறை சோதனை வரும்போது அதை எதிர்கொள்ள தயாராக இருப்பீர்கள்.

சோதனையைப்பற்றிய அறிவு நம்மை, **எந்த சோதனையை மேற்கொள்ள வேண்டும் ? எந்த சோதனையை சகிக்க வேண்டும் ?** என்று புரிந்து அதன்படி செயல்பட உதவி செய்யும். மனிதனாகப்பிறந்த எவரும் சோதனைகளை சந்தித்துதான் ஆக வேண்டுமா ? மனிதர்களை சோதிப்பது யார் ? தேவன் தன் மக்களை சோதிப்பாரா? சோதனை என்றால் என்ன ? சோதனை என்ற வார்த்தையின் அர்த்தம் என்ன ? சோதனையை வெற்றிகரமாக எதிர்கொள்வது எப்படி ? சோதனையில் அகப்படாமல் இருக்க முடியுமா ? சோதனைக்காரன் யார் ? சோதனைதான் மனிதனை பெலப்படுத்துமா ? என்பது போன்ற கேள்விகளுக்கு வேதாகம் தரும் பதிலை பார்ப்போம்.

## வார்த்தை படிப்பு. Word Study.

சோதனையைப்பற்றிய பல தவறான கருத்துக்களுக்கும், நம்பிக்கைக்கும் காரணம் **" தமிழ் வேதாகமத்தில் பல இடங்களிலும் 'சோதனை' என்று குறிப்பிடப்பட்டுள்ள வார்த்தையின் அர்த்தம் புரியாமை "**. இது பல இடங்களிலும் வேறுபட்ட அர்த்தங்களை குறிப்பிடுவதாக உள்ளது. நீங்கள் நினைக்கலாம் இதில் என்ன பெரிய பிரச்சினை ? ஆனால் இதுதான் பெரிய பிரச்சினை. உதாரணத்துக்கு வேதாகமத்தில் **" ஞானஸ்நானம் "** என்று நாம் பார்க்கிற வார்த்தைகள் எல்லாம் " தண்ணீர் முழுக்கு ஞானஸ்நானத்தை " குறிப்பிடுவது இல்லை. வேதாகமத்தில் 7 வகையான ஞானஸ்நானங்களை குறிப்பிடும்படியாக இந்த வார்த்தை வெவ்வேறு இடங்களில் உபயோகப்படுத்தப்பட்டுள்ளது. இது போன்றே **" சிட்சை ", "இரட்சிப்பு", ' மரணம் ', ' பாவம் '**, போன்ற பல

வார்த்தைகளும். இந்த வார்த்தைகளுக்கான மூல எபிரேய/கிரேக்க அர்த்தங்களை முதலில் ஆராய்ந்து பார்க்காமல் இந்த விஷயங்களை பற்றி கோட்பாடுகளை, உபதேசங்களை ( doctrines ) போதிப்பதும் அவற்றை நம்புவதும் வேத போதனைக்கு எதிரானதாகும். *( யோவான் 8:31, ஏசாயா 5:13, நீதி 19:27, ரோமர் 10:17 ).*

சோதனை என்ற விஷயத்தில் " வார்த்தை படிப்பின் " முக்கியத்துவத்தை ஒரு உதாரணம் மூலமாக பார்ப்போம்.

***யாக் 1:13 சோதிக்கப்படுகிற எவனும், நான் தேவனால் சோதிக்கப்படுகிறேன் என்று சொல்லாதிருப்பானாக; தேவன் பொல்லாங்கினால் சோதிக்கப்படுகிறவரல்ல, ஒருவனையும் அவர் சோதிக்கிறவருமல்ல.***

இந்த வசனம் மிகவும் தெளிவாக, உறுதியாக, முடிவாக சொல்லுகிறது தேவன் ஒருவனையும் சோதிக்கிறவர் அல்ல, சோதிக்கப்படுகிறவன் எவனும் தேவன் என்னை சோதிக்கிறார் என்று சொல்லக்கூடாது. இதற்கு மேலும் " தேவன் என்னை சோதித்தார், சோதிக்கிறார் என்று யாரேனும் சொல்வார்களானால் அவர்கள் முழுப்பொய் சொல்கிறார்கள், வேதத்தை பொய்யாக்குகிறார்கள், தேவனை அவமதிக்கிறார்கள் என்று அர்த்தம்.

ஆனால் வேதாகமத்தில் இன்னொரு வசனத்தை பார்ப்போம்,

*ஆதி 22:1 இந்தக் காரியங்கள் நடந்தபின்பு, **தேவன் ஆபிரகாமைச் சோதித்தார்;** எப்படியெனில், அவர் அவனை நோக்கி: ஆபிரகாமே என்றார்; அவன்: இதோ அடியேன் என்றான்.*

இந்த இரண்டு வசனங்களில் எது உண்மை ? இதில் என்ன குழப்பம் ? **" சோதனை என்ற வார்த்தை வேதாகமத்தில் பல அர்த்தங்களில் உபயோகப்படுத்தப்பட்டுள்ளது " என்ற உண்மை பலருக்கும் தெரியாததுதான் குழப்பம்.** ஆகவே முதலில் சோதனை என்னும் விஷயத்தை பற்றிய கோட்பாட்டை (doctrine) படிக்குமுன்பு வேதாகமத்தில் இந்த வார்த்தை உபயோகப்படுத்தப்பட்டுள்ள இடங்களையும் அதன் சரியான அர்த்தங்களையும் பார்ப்போம். இந்த விஷயத்தை படிக்கும் போது உங்களுக்கு முடியுமானால் சிரமம் பார்க்காமல் ஒரு ஆங்கில வேதாகமத்தையும் உடன் வைத்து படித்துக்கொள்ளுங்கள். " **சோதனை** " என்று தமிழில் உபயோகப்படுத்தப்பட்டுள்ள ஒரு வார்த்தைக்காக Trials, Tribulations, Test, Tried போன்ற பல வார்த்தைகள் ஆங்கில வேதாகமத்தில் இன்னும் தெளிவாக உபயோகப்படுத்தப்பட்டிருப்பதை நீங்கள் காணலாம்.

**" சோதனை "** என்ற தமிழ் வார்த்தைக்காக புதிய ஏற்பாட்டில் உபயோகப்படுத்தப்பட்டுள்ள கிரேக்க வார்த்தை " **பெய்ரஸ்மோஸ்** ". இது கீழ்க்கண்டவாறு உபயோகப்படுத்தப்பட்டுள்ளது.

**1. ஒரு உபயோகமான நோக்கத்துக்காக, விளைவுக்காக " துன்பங்கள் ". என்ற அர்த்தத்தில். ( இயேசுவுக்காக, விசுவாசத்துக்காக,சுவிசேஷத்துக்காக துன்பங்கள்)**

**அ.** தேவனால் அனுமதிக்கப்பட்ட அல்லது அனுப்பப்பட்ட " **துன்பங்கள்** " அல்லது " **பரீட்சை** ", யை குறிப்பிடும் விதத்தில் *( லூக்கா 22:28; அப் 20:19: யாக் 1:2; 1 பேதுரு 1:6; 4:12, 2 பேதுரு 2:9, வெளி. 3:10. )*

**ஆ.** ஒரு நடுநிலையான அல்லது நல்ல அர்த்தத்தில். *கலா 4:14* ல் பவுலின் சரீர காயங்களை குறிக்கும் படியாக. அக்காயங்களை பார்த்து இயற்கையிலேயே கலாத்திய விசுவாசிகளுக்கு தோன்றுகிற **வெறுப்பான அல்லது அருவருப்பான உணர்வுகளை** ' சோதனை ' என்று குறிக்கும்படியாக.

**இ.** பலவிதமான " **துன்பங்களை** " குறிக்கிற விதமாக . *மத் 6:13, லூக்கா 11:4* ல், தங்களுடைய கட்டுப்பாட்டுக்கும் மேலான சக்திகளுக்குள் அகப்பட்டு விடாதபடி ஜெபிக்கும்படியாக விசுவாசிகளுக்கு சொல்லப்பட்டிருக்கிறது. *மத் 26;41; மாற்கு 14:38; லூக்கா 22;40,46,* ல் , தங்களது அஜாக்கிரதையாலும் கீழ்ப்படியாமையினாலும் " சோதனைக்குள் " அகப்பட்டு விடாமல் இருக்கும்படியாக சீடர்களுக்கு சொல்லப்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட சமயங்களில் தேவன் ஒரு " தப்பிக்கொள்ளும்படியான போக்கை " கொடுக்கிறார். *1 கொரி 10:13.*

**2. தவறு ( பாவம் ) செய்ய வைப்பதற்கான " தூண்டுதல் " என்ற அர்த்தத்தில்.** *லூக்கா 4:13; 8:13; 1 தீமோ 6:9;*

**3. மனிதர்கள் தேவனை " பரீட்சை பார்த்தல் " அல்லது தேவனுக்கு சவால் விடுதல் " என்ற அர்த்தத்தில்** *எபி 3:8.*

யாக் 1:12 ல் " சோதனை " (1), (2) ல் குறிப்பிடப்பட்டுள்ள அர்த்தங்களை உள்ளடக்கியதுமாகவும், பரந்த அர்த்தத்திலும் குறிப்பிடப்பட்டுள்ளது. *( வைன்ஸ் வேதாகம அகராதி ).*

**பரீட்சை, பரிசோதனை.**

இதற்கான எபிரேய வார்த்தை " **ட்ஸரப்** ". இதன் அர்த்தம் ' **புடமிடுதல், பரிசோதனை செய்தல், உருக்கியெடுத்தல், தேர்வு** '. இந்த அர்த்தங்களில் இந்த வார்த்தை சுமார் 35 முறை பழைய ஏற்பாட்டில் உபயோகப்படுத்தப்பட்டுள்ளது. *நியா 7:4.* ' தேர்வு ' யார் போருக்கு தகுதியானவர்கள் என்று கண்டுபிடிக்க. *எரே 6:29,30. ஏசா 4019; 41:7. சங் 66:10-12. நீதி 30:5. ( வைன்ஸ் வேதாகம அகராதி ).*

**உபத்திரவம், பாடு, சோதனை.**

இதற்கான ஆங்கில வார்த்தை " trial ". இதை குறிப்பிடும்படியாக 4 கிரேக்க வார்த்தைகள உபயோகப்படுத்தப்பட்டுள்ளன.

1. **டோக்கிமி.** இதன் அர்த்தம் 'அனுபவம்'. *2 கொரி 8:2.*
2. **பெய்ரா.** முயற்சி செய்தல், சோதனை செய்தல். *எபிரேயர் 11:29, (உபா 28:56.)*
3. **பெய்ராஸ்மோஸ்.** (2) ல் குறிப்பிட்டுள்ள படி. *அப் 20:19* ல் சோதனை என்று குறிப்பிடப்பட்டுள்ளது.
4. **புரோஸிஸ்.** " தீயில் இடுதல் " இது குறிப்பிடுவது (அ) ' கருக்கிடுவதை ' ( ஆ ) ' புடமிடுதல் '. *1 பேதுரு 4:12* ல் " அக்கினியில் சோதனை " என்று பொன்னை சோதிப்பது போல *1 பேதுரு 1:7.* என்ற அர்த்தத்தில் *( வைன்ஸ் ).*

**ஈஸ்டன் அகராதி.**

1. சோதனை. ( Trial ) . பரிசோதனைக்கு உட்படுத்துதல். *ஆதி 22:1* தேவன் ஆபிரகாமை சோதித்தார் ( பரிசோதனைக்கு உட்படுத்தினார் *(எபி 11:17. Tried)* ). பாடுகள் மனிதனை சோதிப்பவை அதாவது ' பரிசோதிப்பவை ' என்ற அர்த்தத்தில். *( யாக் 1:2, 12. ( உபா 8:2) ).* அவர்களது விசுவாசத்தையும் பொறுமையையும் சோதித்து பார்க்கும்படியாக.
2. பொதுவாக இந்த வார்த்தை " பாவம் செய்யும்படியாக தூண்டுதல், வேண்டுகோள் விடுத்தல் " என்ற அர்த்தத்தை குறிப்பிடும்படியாக உபயோகப்படுத்தப்பட்டுள்ளது. ஆகவே சாத்தான் ' சோதனைக்காரன் ' என்று அழைக்கப்படுகிறான். *( மத் 4:3 ).*

**தையீர் கிரேக்க - ஆங்கில அகராதி.**

1. ஒரு பரிசோதனை, முயற்சி, விசாரணை, நிரூபித்தல்.
2. பாவம் செய்யும்படியாக வசீகரித்தல்.

**வெப்ஸ்டர் அகராதி;**

1. லாபத்தை, இன்பத்தை காட்டி ஒருவரை தவறு செய்யும்படியாக அறிவுறுத்துதல், தூண்டுதல்.
2. பரிசோதனை செய்தல், நிரூபித்தல்.

கீழ்க்காணும் இரு தலைப்புகளிலும் நாம் சோதனை என்ற வார்த்தையின் அர்த்தத்தை மனதிலாக்கிக்கொண்டால், பல வேதாகம வசனங்களையும் சோதனை என்ற முழு விஷயத்தையும் மனதிலாக்கிக்கொள்ளலாம். " சோதனை " என்று நாம் காண்கிற ஒவ்வொரு இடத்திலும் குறிப்பிடப்பட்டுள்ள வார்த்தை கீழ்க்காணும் அர்த்தத்திலோ அல்லது நாம் மேலே படித்த அர்த்தங்களில் ஏதேனும் ஒன்றாகவோ இருக்கலாம்.

1. ஒரு பரிசோதனை, முயற்சி, விசாரணை, நிரூபித்தல்.
2. பாவம் செய்யும்படியாக வசீகரித்தல்.

இதை தெளிவாக அறிந்து கொண்டால், இந்த அறிவினால் சோதனையை முழுமையாக புரிந்து கொள்ளலாம், தயாராக இருக்கலாம், போராடலாம், சகிக்கலாம், எதிர் கொள்ளலாம்.

## சோதனை எல்லா மனிதருக்கும் பொதுவானது.

***1கொரி 10:13*** ***மனுஷருக்கு நேரிடுகிற சோதனையேயல்லாமல் வேறே சோதனை உங்களுக்கு நேரிடவில்லை. தேவன் உண்மையுள்ளவராயிருக்கிறார்; உங்கள் திராணிக்கு மேலாக நீங்கள் சோதிக்கப்படுகிறதற்கு அவர் இடங்கொடாமல், சோதனையைத் தாங்கத்தக்கதாக, சோதனையோடுகூட அதற்குத் தப்பிக்கொள்ளும்படியான போக்கையும் உண்டாக்குவார்.***

சோதனை எல்லா மனிதருக்கும் நேரிடுவது மாத்திரமல்ல அது எல்லா மனிதருக்கும் **பொதுவானது.** விசேஷமான சோதனை என்று ஒன்றும் கிடையாது. அது எல்லா மனிதருக்கும் நேரிடுகிறதே. ஆதாம் ஏவாளை சோதித்த அதே சோதனை, இயேசு சோதிக்கப்பட்ட அதே சோதனை தான் எல்லோருக்கும் வருகிறது. உள்ளே இருக்கும் விஷயம் ஒன்றேதான், அதை மூடி வேறு வேறு பார்சலாக சாத்தான் கொண்டு வருகிறான். இதை புரிந்து கொண்டால் " மற்றவர்களைப்போல அல்ல எனக்கு சோதனை, என்னுடையது மிகவும் கடுமையானது, இதை யாரும் புரிந்து கொள்ள முடியாது " என்று யாரும் ஏமாறத் தேவையில்லை.

நம்மால் தாங்க முடியாத எந்த சோதனையும் நமக்கு சாத்தானால் வராமல் தேவன் பார்த்துக்கொள்வார். சோதனையை தாங்க, அதற்கு தப்பித்துக்கொள்ள ஒரு வழியையும் அவர் உண்டாக்குகிறார். ஆகவே தாங்க முடியாத சோதனை என்பது யாருக்கும் இல்லை. எல்லா சோதனைகளும் தாங்க முடிகிறவைகளே. இதுதான் கடைசி நிமிடம் இன்னும் ஒரு நிமிடம் கூட என்னால் தாங்க முடியாது என்ற இடத்தில், இன்னும் ஒரு நிமிடம் தாங்கிக்கொள்ளுங்கள். அப்போது வெற்றி உங்களுக்கே. இந்த சோதனை என்னால் தாங்க முடியாது என்று சொல்வோமானால் நாம் வேத வசனத்தை பொய்யாக்குகிறோம் என்று அர்த்தம்.

### சோதிக்கப்படுவது பாவம் அல்ல.

*மத் 4:1 அப்பொழுது இயேசு பிசாசினால் சோதிக்கப்படுவதற்கு ஆவியானவராலே வனாந்தரத்திற்குக் கொண்டுபோகப்பட்டார்.*

சோதிக்கப்படுவது பாவம் அல்ல. சோதனையில் வீழ்ந்து போவதே பாவம். சோதனை பாவம் அல்ல, சோதனையின் காரணமாக தீங்கானதை செய்வதே பாவம். சோதிக்கப்படுவது பாவம் என்றால், பரிசுத்த ஆவியானவர் இயேசுவை பாவத்துக்காக ஒரு போதும் அழைத்து செல்ல மாட்டார். இதை ஒரு புகழ் பெற்ற ஊழியக்காரர் இப்படியாக சொன்னார், " தலைக்கு மேலே பறவைகள் பறப்பதை நம்மால் எப்போதும் தடுக்க முடியாது, ஆனால் அவைகள் நம் தலையில் கூடு கட்டி குடியிருப்பதை நிச்சமயாக நம்மால் தடுக்க முடியும் ".

### நீர் தேவனுடைய குமாரனானால்.

*மத் 4:3 அப்பொழுது சோதனைக்காரன் அவரிடத்தில் வந்து: நீர் தேவனுடைய குமாரனேயானால், இந்தக் கல்லுகள் அப்பங்களாகும்படி சொல்லும் என்றான்.*

*மத் 4:6 நீர் தேவனுடைய குமாரனேயானால் தாழக்குதியும்; .......*

சாத்தானின் சோதனைகளில் இரண்டு தொடங்கிய விதம் " நீர் தேவனுடைய குமாரனேயானால் ". இயேசுவின் சோதனையின் நோக்கம் " அவர் யார் என்பதை அவரை சந்தேகிக்க வைப்பது ". நமக்கு வரும் சோதனைகளும் இவ்விதத்திலேயே வரும். " இயேசுவுக்குள் நாம் யார் " என்பதை நாம் சந்தேகிக்க வைப்பதே சாத்தானின் உண்மையான நோக்கம். இயேசுவுக்குள் நாம் யார் என்பதை மறந்து விட்டு, தவறான செயல்களை நம்மை செய்ய வைக்க வேண்டும் என்பதே சாத்தானின் நோக்கம். ஆதலால் விசுவாச வாழ்க்கையின் ஒரு முக்கிய படி " இயேசுவுக்குள் நாம் யார் " என்று வேதாகமம் சொல்வதை அறிந்து அதை மாத்திரம் விசுவாசிப்பது. அதை சந்தேகிக்க வைக்கும் எந்த சூழ்நிலையும், எதுவும் பொய் என்பதில் உறுதியாக இருக்க வேண்டும்.

### சோதனையின் மூன்று முக்கிய இடங்கள்.

*1யோவா 2:16 ஏனெனில், மாம்சத்தின் இச்சையும், **கண்களின் இச்சையும்**, ஜீவனத்தின் பெருமையுமாகிய உலகத்திலுள்ளவைகளெல்லாம் பிதாவினாலுண்டானவைகளல்ல, அவைகள் உலகத்தினாலுண்டானவைகள்.*

தீங்கான அனைத்தையும் இந்த மூன்று **வகைகளுக்குட்டுத்தி** விடலாம். ஆதியாகமம் 3 ம் அதிகாரத்தில் ***ஆதி 3:6*** *அப்பொழுது ஸ்திரீயானவள், அந்த விருட்சம் **புசிப்புக்கு நல்லதும், பார்வைக்கு இன்பமும், புத்தியைத் தெளிவிக்கிறதற்கு** இச்சிக்கப்படத்தக்க விருட்சமுமாய் இருக்கிறது என்று கண்டு, அதின் கனியைப் பறித்து, புசித்து, தன் புருஷனுக்கும் கொடுத்தாள்; அவனும் புசித்தான்.*

மாம்சத்தின் இச்சை = புசிப்புக்கு நல்லது. கண்களின் இச்சை = பார்வைக்கு இன்பம். ஜீவனத்தின் பெருமை = புத்தியைத் தெளிவிக்கிறதற்கு.

**இயேசுவுக்கு வந்த சோதனையையும் இந்த மூன்று வகைக்குள் உட்படுத்தி விடலாம்.**
மாம்சத்தின் இச்சை = கல்லுகளை அப்பமாக்கி பசியை தீர்ப்பதற்கு சோதனை. ***மத் 4:3.***
கண்களின் இச்சை = சாத்தானை பணிந்து கொண்டு உலகத்தின் சகல ராஜ்யங்களையும் அவற்றின் மகிமையையும் பெற்றுக்கொள்ள சோதனை. ***மத் 4:9.***
ஜீவனத்தின் பெருமை = தூதர்கள் வந்து தன்னை கரங்களில் ஏந்திக்கொண்டு போவதன் மூலம் தன் வல்லமையை ' பிரகடனப்படுத்த ' சோதனை. ***மத் 4:6.***
இந்த மூன்று இடங்களும்தான் சோதனை நடக்கிற மிக முக்கியமான இடங்கள். இந்த மூன்று இடங்களில் மாத்திரம்தான் சாத்தான் நம்மை சோதிக்க முடியும். நமக்கு வரும் சோதனைகளும் இந்த மூன்று இடங்களில் ஏதாவது ஒன்றுக்கு சம்பந்தப்பட்டதாகவே இருக்கும். இதை புரிந்து கொள்வது அந்தந்த இடத்தில் சோதனையை சந்திக்க தயாராக இருக்க ஏதுவாகும்.

## சோதனை நடக்கும் விதம்.

***யாக் 1:14 அவனவன் தன்தன் சுய இச்சையினாலே இழுக்கப்பட்டு, சிக்குண்டு, சோதிக்கப்படுகிறான்.***

***15 பின்பு இச்சையானது கர்ப்பந்தரித்து, பாவத்தைப் பிறப்பிக்கும், பாவம் பூரணமாகும்போது, மரணத்தைப் பிறப்பிக்கும்.***

### சோதனையின் 7 படிகள்.

### 1. சோதிக்கப்படுதல். தீங்கான எண்ணம். *( யாக் 1:14 ).*

சோதனையின் தொடக்கம் " **ஒரு எண்ணம்** ". எண்ணம் என்பதன் அர்த்தம் "ஏதாவது ஒன்றைப்பற்றி எண்ணிப்பார்ப்பது ". எந்த ஒரு காரியத்தையும் முதலில் அதைப்பற்றி எண்ணாமல் செய்ய முடியாது. நாம் செய்கிற எல்லாமே ஒரு எண்ணத்தில் இருந்துதான் தொடங்குகின்றன. எண்ணங்கள் முக்கியமானவைகள். அவைகள் உங்கள் வாழ்க்கையை நிர்ணயிப்பவை.

*2கொரி 10:4 எங்களுடைய போராயுதங்கள் மாம்சத்துக்கேற்றவைகளாயிராமல், அரண்களை நிர்மூலமாக்குகிறதற்குத் தேவபலமுள்ளவைகளாயிருக்கிறது. 5 அவைகளால் நாங்கள் தர்க்கங்களையும், தேவனை அறிகிற அறிவுக்கு விரோதமாய் எழும்புகிற எல்லா மேட்டிமையையும் நிர்மூலமாக்கி, எந்த **எண்ணத்தையும்** கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படியச் சிறைப்படுத்துகிறவர்களாயிருக்கிறோம்.*

*நீதி 23:7 அவன் இருதயத்தின் **நினைவு** எப்படியோ, அப்படியே அவன் இருக்கிறான்;*


*ரோம 8:6 மாம்ச**சிந்தை** மரணம்: ஆவியின் **சிந்தையோ** ஜீவனும் சமாதானமுமாம்.*

*எபி 11:15 தாங்கள் விட்டுவந்த தேசத்தை நினைத்தார்களானால், அதற்குத் திரும்பிப்போவதற்கு அவர்களுக்குச் சமயங்கிடைத்திருக்குமே.*


*பிலி 4:8 **க**டைசியாக, சகோதரரே, உண்மையுள்ளவைகளெவைகளோ, ஒழுக்கமுள்ளவைகளெவைகளோ, நீதியுள்ளவைகளெவைகளோ, கற்புள்ளவைகளெவைகளோ, அன்புள்ளவைகளெவைகளோ, நற்கீர்த்தியுள்ளவைகளெ வைகளோ, புண்ணியம் எதுவோ, புகழ் எதுவோ அவைகளையே **சிந்தித்துக்கொண்டிருங்கள்.***

**நம்முடைய மனதின் எண்ணங்கள் மூன்று மூலஸ்தானங்களில் இருந்து உற்பத்தியாகின்றன.**

1. நம் மனம். 2. பரிசுத்த ஆவி. 3. பாவப்பிரமாணம் .




*ரோம 7:23 ஆகிலும் என் மனதின் பிரமாணத்துக்கு விரோதமாய்ப் போராடுகிற வேறொரு பிரமாணத்தை என் அவயவங்களில் இருக்கக் காண்கிறேன்; அது என் அவயவங்களில் உண்டாயிருக்கிற பாவப்பிரமாணத்துக்கு என்னைச் சிறையாக்கிக் கொள்ளுகிறது.*




"பிரமாணம்" என்று, இந்த வசனத்தில் மூன்று முறை மொழிபெயர்க்கப்பட்டிருக்கிற கிரேக்க வார்த்தை " நோமோஸ் ". இதன் அர்த்தம் " ஒரு செயலை செய்ய தூண்டுகிற ஆற்றல் அல்லது செல்வாக்கு " (வைன்ஸ்). இந்த வசனம் " **பழைய மனிதனை** " " **பாவ சுபாவத்தை** " குறிப்பிடுவது அல்ல, மாறாக அதன் **ஆற்றலை, ஈர்ப்பை** குறிப்பிடுகிறது. ***ரோமர் 7:22*** ம் வசனத்தில் இதே வார்த்தை தேவனுடைய நியாயப்பிரமாணத்தை குறிப்பிடும்படியாக உபயோகப்படுத்தப்பட்டுள்ளது. இந்த இடத்தில் இது தேவனை குறிப்பிடுவது அல்ல, மாறாக அவரது கட்டளைகளின் மூலமாக வருகிற தேவனுடைய **ஆற்றலை, ஈர்ப்பை** குறிப்பிடுகின்றன. அது போலவே *23* ம் வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது, " **பழைய மனிதனின் ஆற்றல், ஈர்ப்பு, கவர்ந்திழுத்தல், செல்வாக்கு** ".

*ரோம 6:6 நாம் இனிப் பாவத்துக்கு ஊழியஞ் செய்யாதபடிக்கு, பாவசரீரம் ஒழிந்துபோகும்பொருட்டாக, நம்முடைய பழைய மனுஷன் அவரோடேகூடச் சிலுவையில் அறையப்பட்டதென்று அறிந்திருக்கிறோம்.*

நம்முடைய " பழைய மனுஷன் " ( பழைய சுபாவம் ) மரித்து அழிந்து போனான். ஆனால் அவன் ஒரு **"சரீரத்தை"** விட்டு சென்றான். பழைய மனிதனின் இந்த சரீரம்தான் " **உணர்ச்சிகளும் மனப்பாங்கும்** ". நாம் நம்முடைய மனதை புதிதாக்குவது வரை இவற்றின் ஈர்ப்பு நம்மேல் இருக்கும். நாம் நேரடியாக பழைய மனிதனோடு உறவாடுவதில்லை, மாறாக அவன் விட்டு சென்ற செல்வாக்கோடு, ஆற்றலோடு, சக்தியோடு உறவாடுகிறோம். நம்முடைய மாம்சத்தின் மூலமாக இது நம்மேல் கிரியை செய்கிறது. பழைய மனிதனின் இந்த சக்திதான் " **பாவப்பிரமாணம்** " அல்லது " **பாவ சக்தி** " என்று அழைக்கப்படுகிறது. இது இருப்பது **"நம் அவயங்களில்"**. இது எப்போதும் நம் மனதின் சக்திக்கு விரோதமாய்ப் போராடுகிறது ஆகவே, விசுவாச

வாழ்க்கை என்பது, நம்முடைய மனதை புதிதாக்குவது. நம்முடைய பழைய சுபாவத்தை வெறுப்பது மாத்திரம் அல்ல.

**இந்த பாவப்பிரமாணம் இரண்டு வழிகளில் நம் மனதுக்கு எண்ணங்களை கொடுக்கிறது.**

**அ.** அது " நான், என், என்னுடைய," போன்ற பிரதிப்பெயர்களை உபயோகித்து, விசுவாசியின் மனதில் " **அவரது எண்ணங்கள்** " என்று **எண்ணங்களை கொடுக்கிறது.**

**ஆ.** மூளையில் உள்ள " **மாமிச மாதிரிகளை** " ( **பழைய பழக்க வழக்கங்களின் ஞாபகத்துளிகள்** ) உபயோகித்து, ஒருவருடைய சொந்த மனதில் உற்பத்தியான எண்ணங்களை போன்ற எண்ணங்களை கொடுக்கிறது. ( *பிலி 3:4* உலகத்தின் வழக்கப்படி நடந்து நாம் கற்றுக்கொண்ட பழைய வழிகளை வேதாகமம் " மாமிசம் " என்று அழைக்கிறது.)

உதாரணத்துக்கு வாழ்க்கையில் ஒருவர் ஏதாவது ஒரு சூழ்நிலை காரணமாக சோர்ந்திருக்கும்போது, கவர்ந்திழுக்கப்படும்போது, மன வேதனையில் இருக்கும்போது இந்த பாவப்பிரமாணம் நாம் முன்பு பார்த்து ரசித்த ஒரு சினிமாப்பாடலின் வரியை, அனுபவத்தை, சம்பவத்தை மனதில் கொண்டு வரும். அந்த எண்ணத்தை நம் எண்ணம்தான் என நினைத்து அதை நாம் மனதில் எடுத்துக்கொள்வோம். ' எனக்கு இப்படி தோன்றுகிறது, நான் இப்படி உணருகிறேன்' என்று நினைத்துக்கொள்வோம். ஆனால் உண்மையில் இவை ' நம் ' எண்ணங்கள் அல்ல, தக்க சமயத்தில் சாத்தானுக்கு உடன்படும் " பாவப்பிரமாணம் " கொண்டு வருகிற எண்ணங்கள்.

இந்த எண்ணங்களை " **தன் எண்ணங்கள்** " என்று நினைத்து ஏற்றுக்கொள்கிற விசுவாசிக்கு இந்த எண்ணங்கள் " **அவரது சொந்த எண்ணங்களாகி விடுகின்றன** ". பின் அவர் அவற்றின் பின் தன் மனதை பதித்து, தான் எதை செய்ய வேண்டாம் என்று நினைக்கிறாரோ அதையே செய்வார். *( ரோமர் 7:15 ).*

**2. இழுக்கப்படுதல். கற்பனை செய்வது.** *( யாக் 1:14 ).*

மனதுக்குள் வந்த எண்ணங்களை மனதுக்குள் ஆழ்ந்து சிந்திப்பது, தியானிப்பது, மனப்படம் வரைவது.

**3. இச்சை; கற்பனையில் இன்பம் காணுதல்.** *( யாக் 1:14 ).*

எண்ணங்களால் உருவாகும் அளவுக்கதிகமான ஆசை. (மத் 5:28). கெட்ட எண்ணங்களை மனதுக்குள் வளர விடும்போது அது இச்சையாக உருவெடுக்கிறது. கிறிஸ்தவ வாழ்க்கையின் ஒருபகுதி உலகத்தின் இச்சைகளோடு போராடுவது. *( 2 தீமோ 4:7, எபே 6:12, 1 யோவான் 2:15-17, தீத்து 2:11-12 ).*

**4. சிக்குதல். சித்தம் தளர்ந்து போகுதல்.** *( யாக் 1:14 ).*

இந்த இச்சையின் ஆதிக்கத்தால், சுய சித்தம் தளர்ந்து போகிறது. ( தீர்மானம் எடுக்கும் உரிமை விட்டுக்கொடுக்கப்படுதல் ) ஒரு மீன் தூண்டிலில் சிக்கிக்கொள்வது போல.

**5. இச்சை கர்ப்பந்தரித்தல். முழுமையாக ஒப்புக்கொடுத்தல்.** *( யாக் 1:15 ).*

இச்சையான உணர்ச்சிகளுக்கு நம்மை முழுவதுமாக ஒப்புக்கொடுக்கும்போது, அதனுடன் சேரும்போது இச்சை பாவத்தை கர்ப்பம் தரிக்கிறது. இச்சை பாவத்தை கர்ப்பந்தரித்து பிறக்க செய்யாமல் இருப்பதற்கு, இச்சையுடன் மனதில் நடக்கும் உடலுறவு கொள்வது தவிர்க்கப்பட வேண்டும். ( கெட்ட உணர்ச்சிகளோடு மனதில் உறவு கொள்வது தவிர்க்கப்பட வேண்டும். அப்போது இச்சை கர்ப்பம் தரிக்க முடியாது.

**6. பாவம் பிறத்தல்.** பாவச்செயல் செய்யப்படுதல் *( யாக் 1:15 ).* நிறைவேற்றப்படுதல், முழுமையடைதல்.

**7. மரணம். பாவத்தின் விளைவு.** *( யாக் 1:15 ).* மரணத்தை கொண்டு வருகிற அனைத்தும். ( துன்பம், துக்கம், துயரம், வேதனை, வறுமை, நோய், இழப்பு, பாவம் போன்றவை ).

## சோதனையை எதிர்கொள்வது எப்படி.


சோதனை நடக்கும் விதத்தில் இருந்து நாம் புரிந்து கொண்டோம், சோதனையின் தொடக்கம் " **ஒரு எண்ணம்** ". இத்தகைய எண்ணங்களை முளையிலேயே கிள்ளி எறிந்தால் பின்னால் அதன் மற்ற நிலைகளோடு நாம் போராட வேண்டியதில்லை. ஒரு விசுவாசியின் ஆவிக்குரிய போராட்டத்தின் பெரும்பகுதியும் " **எண்ணங்களோடு போராடுவதே** ". ஆவிக்குரிய போராட்டத்தின் பெரும்பகுதி நடை பெறும் இடம் " **நம் மனம்** ".

### எண்ணத்தோடும், அதனால் சோதனையோடும் எப்படி நடந்து கொள்ள வேண்டும்.?

**1. பாவப்பிரமாணத்தில் இருந்து நீங்கள் விடுதலையாக்கப்பட்டிருக்கிறீர்கள் என்று அறிந்து கொள்ளுங்கள்.**

*ரோம 8:2 கிறிஸ்து இயேசுவினாலே ஜீவனுடைய ஆவியின் பிரமாணம் என்னைப் பாவம் மரணம் என்பவைகளின் பிரமாணத்தினின்று விடுதலையாக்கிற்றே.*

நாம் இரட்சிப்பின் பெற்றுக்கொண்ட ஒரு மாபெரும் ஆசீர்வாதம் " **இயேசு கிறிஸ்துவில் உள்ள ஜீவனுடைய ஆவியின் பிரமாணம்** ". இந்த பிரமாணம் நம்மை பாவப்பிரமாணத்தில் இருந்து விடுதலையாக்கியது.




பிரமாணம் என்பது ஒரு விதி, விசை, சக்தி. அதாவது " நியூட்டனின் இரண்டாம் விதி ", " புவி ஈர்ப்பு விசை " என்று நாம் அழைப்பது. உதாரணத்துக்கு புவி ஈர்ப்பு விசை என்றால் அது உலகம் எங்கும் பொதுவானது. யாரும் அதன் சக்தியில் இருந்து விடுபட்டிருக்க முடியாது. அது ஒரு விதி. இப்படிப்பட்ட ஒரு விசையை நாம் மேற்கொள்ள வேண்டுமானால், அதற்கு எதிராக வேறு ஒரு விசையை உபயோகிக்க வேண்டும்.

இங்கே, உந்து விசையை உபயோகிக்க வேண்டும். அப்போது விமானம் பறக்கும், ராக்கெட் விண்வெளிக்கு செல்லும். அது போலவே, பாவப்பிரமாணம் எப்படி ஒரு விசையோ, அது போலவே ஜீவனுடைய ஆவியின் பிரமாணம் ஒரு விசை. இந்த விசையானது இப்போது நம்மில் கிரியை செய்து கொண்டிருப்பதால் இது பாவப்பிரமாணத்துக்கு எதிராக செயல்பட்டு நம்மை அதன் பிடியில் இருந்து விடுவித்திருக்கிறது. ஒரு உந்து விசை எப்படி புவி ஈர்ப்பு விசையில் இருந்து நம்மை விடுவிக்கிறதோ அப்படி. ஒரு மனிதன் இரட்சிக்கப்படுமுன்பு அவனிடத்தில் இந்த " இயேசு கிறிஸ்துவில் உள்ள ஜீவனுடைய ஆவியின் பிரமாணம் " இல்லை. ஆகவே அவன் ' பழைய சுபாவம் ' என்கிற விசைக்கு கீழ்ப்பட்டே ஆக வேண்டும். ஆனால் இரட்சிக்கப்பட்ட ஒருவரிடம் பழைய மனிதன் இல்லை. **அவன் விட்டு சென்ற விசையான ' பாவப்பிரமாணத்துக்கு ' எதிராக ஜீவனுடைய ஆவியின் விசை ' இருப்பதனால் அவர் பாவப்பிரமாணத்துக்கு கீழ்ப்பட்டிருக்க வேண்டிய அவசியம் இல்லை.** பாவப்பிரமாணம் உங்கள் மனதுக்குள் கொண்டு வருகிற எந்த " எண்ணத்தையும் " நீங்கள் உங்கள் எண்ணமாக ஏற்றுக்கொள்ள வேண்டியதில்லை. உதாரணத்துக்கு, நீங்கள் இரட்சிக்கப்படுவதற்கு முன்பு யாராவது உங்களைப்பற்றி ஏதாவது சொன்னால் உடனே மிகவும் டென்ஷன் ஆகி விடுகிறவர்களாக இருந்தீர்கள் என்று வைத்துக்கொள்வோம். இப்போது நீங்கள் இரட்சிக்கப்பட்ட பிறகு உங்கள் சபையில், அல்லது வேலையிடத்தில் யாராவது ஒருவர் உங்களைப்பற்றி ஏதாவது சொல்கிறார் என்றால் உடனே மனதில் டென்ஷன் வரும், ஆனாலும் நீங்கள் இரட்சிக்கப்பட்டவர் என்பதால் அதை அடக்கிக்கொள்வீர்கள். பின் சற்று நேரம் கழித்து மீண்டும் மீண்டும் மனதில் அந்த எண்ணம் தோன்றும், " இப்படி என்னை கேட்டு விட்டானே, அவனை விடக்கூடாது, " என்ற எண்ணம் மீண்டும் வரும். அருமை சகோதரா / சகோதரி! அப்போது நீங்கள் மனதிலாக்கிக்கொள்ள வேண்டும், இந்த எண்ணத்துக்கு காரணம் " நீங்கள் " அல்ல உங்கள் அவயங்களில் இருக்கிற **பாவப்பிரமாணம்.** உடனே சுதாகரித்துக்கொள்ளுங்கள். வாய் விட்டு சொல்லுங்கள் " ஏ பாவப்பிரமாணமே! நீ கொண்டு வருகிற எண்ணத்தை நான் மனதிலாக்கிக்கொண்டேன். நீ என் மனதில் இந்த எண்ணத்தை போட முடியாது. இதை நான் ஏற்றுக்கொள்ள மாட்டேன் என்று சொல்லுங்கள் ". நீங்கள் பாவபிரமாணத்துக்கும், அது உங்களிடத்தில் கொண்டு வரும் தீங்கான எண்ணங்களுக்கும் கீழ்ப்படிய வேண்டியதில்லை.

## 2. ஆவிக்குரிய போராயுதங்களை உபயோகித்து எண்ணங்களை சிறைபிடியுங்கள்.

*2கொரி 10:4 எங்களுடைய போராயுதங்கள் மாம்சத்துக்கேற்றவைகளாயிராமல், அரண்களை நிர்மூலமாக்குகிறதற்குத் தேவபலமுள்ளவைகளாயிருக்கிறது.*

*5 அவைகளால் நாங்கள் தர்க்கங்களையும், தேவனை அறிகிற அறிவுக்கு விரோதமாய் எழும்புகிற எல்லா மேட்டிமையையும் நிர்மூலமாக்கி, எந்த எண்ணத்தையும் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படியச் சிறைப்படுத்துகிறவர்களாயிருக்கிறோம்.*

*ரோமர் 13:12, 2 கொரி 6:7, எபே 6:10-18, 1 தெசலோ 5:8, வெளி 1:16; 2:12, 19:15.* போன்ற இடங்களில் சில ஆவிக்குரிய போராயுதங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. அவற்றின் பிரதான உபயோகம் " எந்த எண்ணத்தையும் கிறிஸ்துவுக்கு கீழ்ப்படியச் சிறைப்படுத்துவது ". உதாரணத்துக்கு, பணக்கஷ்டத்தில் இருக்கிறீர்கள் என்று வைத்துக்கொள்வோம். சம்பளம் கிடைத்திருக்கிறது. நம் மனம் சொல்லும் "முதலாவது தேவனுக்கு கொடுக்க வேண்டிய தசமபாகத்தை கொடுத்து விடு" என்று. நீங்களும் சரி என்று சொல்வீர்கள். சற்று நேரம் பொறுத்து உங்கள் அவயங்களில் இருக்கிற பாவப்பிரமாணம் ஒரு எண்ணத்தை உங்கள் மனதுக்குள் கொண்டு வரும் " இப்போது இருக்கும் பணம் செலவுக்கு சரியாக இருக்கிறது. இதில் 10 சதமானத்தை எடுத்தால் பணம் குறைந்து போகாதா? பின் செலவுக்கு என்ன செய்வது ? ஆகவே அடுத்த மாதம் கொடுக்கலாம் என்று. இந்த எண்ணத்தின் தாக்குதலை எதிர்த்து அதை சிறைப்பிடிக்க விசுவாசம் என்னும் கேடகத்தை *( எபே 6:16 )* உபயோகியுங்கள். *லூக்கா 6:38, மல்கியா 3:10* என்னும் வாளை எடுத்துக்கொள்ளுங்கள் *( வெளி 1:16 ).* இந்த

எண்ணத்தோடு எதிர்த்து நில்லுங்கள். உடனே இயேசுவோடு பேசுங்கள், " இயேசுவே இந்த தீங்கான எண்ணத்தை உம்மிடம் கொண்டு வருகிறேன். நீர் இப்போது இதை கவனித்துக்கொள்ளும். நன்றி " என்று. அந்த வினாடியே அந்த எண்ணம் தீயில் இடப்பட்ட சிறு பனிக்கட்டியை போல ஆவியாகப்போகும்.

### 3. உங்கள் எண்ணங்களை தேர்ந்தெடுத்துக்கொள்ளுங்கள்.

*பிலி 4:8 கடைசியாக, சகோதரரே, உண்மையுள்ளவைகளெவைகளோ, ஒழுக்கமுள்ளவைகளெவைகளோ, நீதியுள்ளவைகளெவைகளோ, கற்புள்ளவைகளெவைகளோ, அன்புள்ளவைகளெவைகளோ, நற்கீர்த்தியுள்ளவைகளெவைகளோ, புண்ணியம் எதுவோ, புகழ் எதுவோ அவைகளையே சிந்தித்துக்கொண்டிருங்கள்.*

உங்கள் மனது உங்களுடையது. உங்களுடைய தோட்டத்தில் என்ன வளர வேண்டும் என்று நீங்கள் தீர்மானிக்கலாமோ, அது போலவே உங்கள் மனதும் எதை சிந்திக்க வேண்டும் என நீங்கள் தீர்மானிக்கலாம். உங்கள் மனது எதை சிந்திக்க வேண்டும் என்று தேர்ந்தெடுங்கள். அவற்றையே சிந்தியுங்கள்.

### 4. மனதைப்புதிதாக்குங்கள்.

*ரோம 12:2 நீங்கள் இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல், தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமுமானசித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக, உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள்.*

" மறப்பது " என்பது எளிதான காரியம் அல்ல. மனது ஒன்றை நினைத்து விட்டால் அதை மறப்பது மிகவும் கடினம். உதாரணத்துக்கு, இப்போது உங்கள் கண்களை மூடிக்கொள்ளுங்கள். உங்கள் மனதில் ஒரு அழகான ரோஜாப்பூவை நினைத்துக்கொள்ளுங்கள். இப்போது மீண்டும் கண்ணை திறந்து விட்டு அந்த ரோஜாப்பூவை மறக்க முயற்சி செய்யுங்கள். இப்போது உங்களுக்கு புரியும் நினைப்பதை விட மறப்பது கடினம். நீங்கள் எவ்வளவுக்கதிகமாக அந்த ரோஜாப்பூவை மறக்க நினைக்கிறீர்களோ, அவ்வளவுக்கதிகமாக நீங்கள் அதை நினைப்பீர்கள். இப்போது மீண்டும் கண்களை மூடிக்கொண்டு நம் ஊரில் தோவாளை வழியாக வரும்போது ரோட்டு ஓரத்தில் குவித்து வைக்கப்பட்டிருக்கும் குண்டு மல்லி பூக்குவியலை நினைத்துக்கொள்ளுங்கள். சில வினாடிக்குள் நீங்கள் ரோஜாப்பூவை மறந்து விடுவீர்கள். நம் பழைய நினைவுகள் பலவற்றை ( பலருக்கும், பல வேளைகளிலும் அந்த நினைவுகள் இனிய நினைவுகளாக இருந்தாலும் ) நாம் மறந்தே ஆக வேண்டும். அவற்றை நம் அவயங்களில் இருக்கிற பாவப்பிரமாணம் பல வேளைகளிலும் நம் மனதுக்குள் கொண்டு வரும். உதாரணத்துக்கு குடும்பங்களில் சோதனை வருகிற ஒரு விதத்தை எடுத்துக்கொள்வோம். ஏதாவது ஒரு சமயத்தில் கணவனோ, அல்லது மனைவியோ ஒருவர் மற்றவரை உதாசீனப்படுத்துகிற விதத்தில் பேச நேரிடலாம். அப்போது ஒருவர் மனங்கசந்து, மனமொடிந்து, சோர்வாக உட்கார்ந்திருப்பார். மனது மிகவும் வெறுமையாக இருக்கும். அப்போது பாவப்பிரமாணம், வாழ்க்கையில் நாம் முன்பு பழகியிருந்த ஒருவரைப்பற்றிய ஒரு " இனிமையான " எண்ணத்தை, நம் மனதுக்குள் கொண்டு வரும். அவன்/அவள் எவ்வளவு இனிமையாக, பொறுமையாக பேசி நம்மை மதிப்பவர். இவரும் இருக்கிறாரே எவ்வளவு கீழ்த்தரமாக நம்மை நடத்துகிறார் ! என்ற எண்ணத்தை போடும். அவ்வளவுதான், அந்த குடும்பத்தில் பின் அதன் தொடர்ச்சியாக சண்டைகளும் சச்சரவுகளும் தொடர்கதையாகும். சோதனையாகும். ஆகவே பழைய எண்ணங்களை மறந்தே ஆக வேண்டும். நல்ல, இனிய, கெட்ட, தீங்கான, தேவையற்ற அனைத்து எண்ணங்களையும்.

அதற்கு நாம் செய்ய வேண்டியது, வேத வசனங்களை படித்து, சிந்தித்து, தியானித்து, வேதவசனம் நம்மை பற்றி இப்போது என்ன சொல்லுகிறது என்பதை ஏற்றுக்கொண்டு, அந்த எண்ணங்களால் நம் மனதை நிறைக்க வேண்டும். இப்படி மனதை புதிதாக்க வேண்டும். *( ரோமர் 8:6, 2 கொரி 5:17 ).*

### 5. தேவனுடைய வசனத்தை அறிந்து கொண்டு அதை சிந்தியுங்கள்.

இயேசு சோதனையை எதிர்கொள்ள உபயோகித்த ஆயுதம் " **தேவனுடைய வார்த்தை** " " எழுதியிருக்கிறதே "

*மத் 4:4 அவர் பிரதியுத்தரமாக: மனுஷன் அப்பத்தினாலேமாத்திரமல்ல, தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான் என்று **எழுதியிருக்கிறதே** என்றார்.*

*மத் 4:7 அதற்கு இயேசு: உன் தேவனாகிய கர்த்தரைப் பரீட்சை பாராதிருப்பாயாக என்றும் **எழுதியிருக்கிறதே** என்றார்.*

*மத் 4:10 அப்பொழுது இயேசு: அப்பாலே போ சாத்தானே; உன் தேவனாகிய கர்த்தரைப் பணிந்துகொண்டு, அவர் ஒருவருக்கே ஆராதனை செய்வாயாக என்று **எழுதியிருக்கிறதே** என்றார்.*

இயேசு கிறிஸ்து வாய் திறந்து பேசுகிற ஒவ்வொரு வார்த்தையும் " வேத வசனமே ". ஆனாலும் அவர் ஏற்கனவே எழுதப்பட்டிருந்த வார்த்தைகளை தன் சிறுவயதிலேயே ( 12 ம் வயதிலேயே வேத பண்டிதரோடு தர்க்கம் பண்ணுகிற அளவுக்கு ) கற்று, அறிந்து வைத்திருந்தார். சோதனை வரும்போது வசனங்களை தேடாமல், வேறு யாருக்கும் கடிதம் எழுதாமல், உடனே எடுத்து உபயோகித்தார். ஆவிக்குரிய போராயுதங்களை " **தரித்துக் கொள்வது** " ( அணிந்து கொள்வது ) என்பது, விசுவாசம், நீதி, இரட்சண்யம் இவைகளைப்பற்றிய வேத வசனங்களை படித்து, புரிந்து, தியானித்து அவற்றை நம் மனதில் ஆழப்பதித்து வைத்துக்கொள்வது. ஏதோ சில வசனங்களை பற்றிய அறிவு, எல்லா சோதனைகளையும் எதிர்த்து நிற்க போதாது. வேத வசனங்கள் அனைத்தையும் பற்றிய ஆழமான அறிவே சோதனைகளை எதிர்த்து நிற்க வல்லமையான ஆயுதம். ஏதாவது ஒரு விஷயத்தை பற்றிய 5 வசனங்களை, சட்டை பாக்கெட்டில் வைக்கும் ஒரு சிறு நோட்டில் குறிது

வைத்துக்கொள்ளுங்கள். ஒரு நாள் ஒரு வசனம் என்று மனப்பாடம் செய்து அதை தியானியுங்கள். சுமார் 5 மாதத்துக்குள்ளாக 30 விஷயங்களை பற்றிய சுமார் 150 வசனங்கள் உங்கள் மனதில் இருக்கும். முயற்சி செய்து பாருங்கள். உங்கள் வாழ்க்கையில் பெரிய மாற்றத்தை காண்பீர்கள். வெகு சீக்கிரத்தில் எந்த சூழ்நிலையையும், எந்த சோதனையையும் எதிர் கொள்ள பல வசனங்கள் உங்கள் மனதில் இருந்து ஓர் போர் வாளைப்போல வேகமாகப்பாய்ந்து வரும். சோதனையின் வித்தான எண்ணங்களை சின்னா பின்னமாக்கும்.

### 6. ஜெபம்.

சோதனை நாம் எதை எண்ணுகிறோமோ அதனோடு நேரடி தொடர்பு உள்ளது. *எபி 11:15 தாங்கள் விட்டுவந்த தேசத்தை நினைத்தார்களானால், அதற்குத் திரும்பிப்போவதற்கு அவர்களுக்குச் சமயங்கிடைத்திருக்குமே.*
ஜெபத்தில் நாம் இருக்கும்போது, நம்முடைய மனது தேவன் மேல் இருப்பதனால், சோதனைகளை உண்டுபண்ணுகிற எண்ணங்களை அது ஏற்றுக்கொள்ளாது. *( ஏசாயா 26:3, பிலி 4:8 ).* மனது தேவன் மேலேயே பதிந்திருக்கும். ஜெபிக்கும் வழக்கம் ஒரு தொடர்ச்சியான வழக்கமாக விசுவாசியின் வாழ்க்கையில் இருக்கும்போது, அவரால் தீங்கான காரியங்களை நினைக்க முடியாது. நாம் எதை நினைக்க வில்லையோ அதை செய்ய முடியாது *( எபி 11:15 ).* உதாரணத்துக்கு ஒருவரை மன்னிக்க வேண்டும். ஜெபத்தில் இயேசுவோடு பேசிக்கொண்டிருக்கும்போது, இயேசுவோடு பேசி, இயேசுவே, ' இந்த மனிதரை நான் மனப்புர்வமாக மன்னித்து விட்டேன் ' என்று ஜெபியுங்கள். பின் அடுத்த நாள் அந்த மனிதரை பார்க்கும்போது உங்களால் சுலபமாக மன்னிக்க முடியும். சோதனையில் விழாமல் இருப்பதற்கான ஒரு நல்ல வழி ஜெபிப்பது.

### 7. உபவாசம்.

*மத் 4:2 அவர் இரவும் பகலும் நாற்பதுநாள் உபவாசமாயிருந்தபின்பு, அவருக்குப் பசியுண்டாயிற்று.*
உபவாசத்தின் ஒரு முக்கிய உபயோகம் மாம்சத்தின் இச்சை பேணப்படாததனால், நம்முடைய ஆவிக்குரிய மனிதன் பலப்படுதல். உபவாசம், உலகத்தில் இருந்து வருகிற அவ்விசுவாசத்தை ( unbelief ) போக்குகிறது.*( மத் 17:21 ). கலா 5:17* ல் குறிப்பிடப்பட்டுள்ள மாம்சத்துக்கும் ஆவிக்கும் உள்ள போராட்டத்தில் உபவாசம் ஒரு வல்லமையான ஆயுதம். மாம்சத்தின் இச்சை, அவ்விசுவாசம் போன்றவை சோதனையின் முக்கிய காரணங்கள். ஆகவே உபவாசம் சோதனைக்கு எதிரான வல்லமையான ஆயுதம்.

### 8. இருதயத்தை முன்பே தயார்படுத்தி வைத்துக்கொள்ளுங்கள்.

*சங் 57:7 என் இருதயம் ஆயத்தமாயிருக்கிறது, தேவனே, என் இருதயம் ஆயத்தமாயிருக்கிறது; நான் பாடிக்கீர்த்தனம்பண்ணுவேன்.*
வேதாகமத்தில் இந்த சங்கீதத்தை படிக்கும்போது, " தாவீது சவுலுக்கு விலகி கெபியில் இருந்து ஓடிய போது பாடிய சங்கீதம் " என்ற அர்த்தத்தை குறிக்கும்படியாக தலைப்பு போடப்பட்டிருக்கும். இந்த சம்பவம் *1 சாமுவேல் 24* ல் குறிப்பிடப்பட்டுள்ளது.

*1சாமு 24:4 அப்பொழுது தாவீதின் மனுஷர் அவனை நோக்கி: இதோ, நான் உன் சத்துருவை உன் கையில் ஒப்புக்கொடுப்பேன்; உன் பார்வைக்கு நலமானபடி அவனுக்குச் செய்வாயாக என்று கர்த்தர் உன்னோடே சொன்ன நாள் இதுதானே என்றார்கள். தாவீது எழுந்திருந்துபோய், சவுலுடைய சால்வையின் தொங்கலை மெள்ள அறுத்துக்கொண்டான்.*
சவுலை கொல்வதற்கான நியாயப்படுத்த முடிகிற பல காரணங்கள் தாவீதுக்கு இருந்த போதிலும் தாவீது அவனை கொல்ல வில்லை. அந்த இடத்தில் எல்லோரும் சவுலைகொல்ல சொல்லும்போதும், தாவீது சவுலை கொல்லாமல், அந்த பெரிய சோதனையில் இருந்து தப்பித்ததன் காரணம் " அவன் இருதயம் ஆயத்தமாயிருந்தது ". ஆங்கிலத்தில் இது "fixed" என்று இருக்கிறது. இதன் அர்த்தம் தயாராக இருப்பது, நேராக இருப்பது, உறுதியாக இருப்பது. சோதனை வந்து கதவை தட்டும்போது அதன் பின் நம்மை தயார் படுத்தி கொள்வது என்பது முடியாத காரியம். நாட்களாக, மாதங்களாக, வருடங்களாக நம் இருதயத்தை தேவனுக்கு ஏற்றதாக தயார்படுத்தி வைத்துக்கொள்ள வேண்டும். அப்பொது சோதனை வரும்போது அதை எதிர் கொள்ள நாம் தயாராக இருப்போம்.

*2நாளா 12:14 அவன் கர்த்தரைத் தேடுகிறதற்குத் தன் இருதயத்தை நேராக்காமல் பொல்லாப்பானதைச் செய்தான்.*

கர்த்தரை தேடுகிறதற்கு, தாவீது இருதயத்தை நேராக்கி வைத்திருந்ததை போல இங்கே ரெகொபெயாம் தன் இருதயத்தை நேராக்கி வைக்காததால் பொல்லாப்பானதை செய்தான். சோதனையில் விழாமல், பாவம் செய்யாமல் இருக்க ஒரு சிறந்த வழி " இருதயத்தை முன்பே தயார் படுத்தி வைத்துக்கொள்வது ".

### 9. பிடுங்கிப்போடுங்கள்.

*மத் 5:29 உன் வலது கண் உனக்கு இடறலுண்டாக்கினால், அதைப் பிடுங்கி எறிந்துபோடு; உன் சரீரம் முழுவதும் நரகத்தில் தள்ளப்படுவதைப்பார்க்கிலும், உன் அவயவங்களில் ஒன்று கெட்டுப்போவது உனக்கு நலமாயிருக்கும்.*

*லூக்கா 14:26* போல இதையும் ஒரு உவமையான அர்த்தத்தோடு எடுத்துக்கொள்ள வேண்டும். இதன் மூலம் சோதனையில் விழாமல் இருப்பது கண்ணை விட முக்கியம் என்று இயேசு சொல்லுகிறார். இன்னும் ' சோதனை

வருவதற்கு காரணமான எந்த அவயமும் மூடப்பட வேண்டும், சோதனையை வர வைக்கிற எந்த பொருளும் கைவிடப்பட வேண்டும் ' என்றும் இதற்கு அர்த்தம் கொள்ளலாம்.

## 10. இச்சைகளை நிறைவேற்றும்படியாக மாம்சத்துக்கு உணவளிக்காமல் இருங்கள்.

*ரோம 13:14 துர்இச்சைகளுக்கு இடமாக உடலைப் பேணாமலிருந்து, கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவைத் தரித்துக்கொள்ளுங்கள்.*

இங்கே பவுல் " **உடல்** " ( in english bible - flesh ) என்று குறிப்பிடுவது, இயேசுவினால் மாற்றப்படாத மனித பகுதியை குறிக்கிறது. அதாவது " பாவப்பசியையும் பாவ ஆசைகளையும் " குறிக்கிறது. இவைகளுக்கு நாம் உணவளிக்காமல் இருந்தால் அவைகள் நம்மை கீழ்ப்படுத்த முடியாது. ' மாம்சத்துக்கு உணவு கொடுக்காமல் அதை பட்டினி போட்டு அது மரிக்கும்படியாக செய்ய வேண்டும் " என்று பவுல் சொல்லுகிறார். பலரது வாழ்க்கையில் மாம்சம் ( பாவப்பசியும் பாவ ஆசைகளும் ) மிகவும் பெலத்தோடு இருக்கிற காரணம், அவர்கள் தொடர்ந்து அதற்கு உணவளிப்பதால்.

" இயேசு கிறிஸ்துவை தரித்துக்கொள்வது " என்பது, அவருடைய விருப்பங்களை, வழிகளை, எல்லாம் தனதாக எடுத்துக்கொண்டு அவரைப்போல எல்லாம் செய்வது. பரிசுத்த ஆவியானவர் மூலமாக ஒரு விசுவாசியால் இதை செய்ய முடியும்.

*கலா 5:24 கிறிஸ்துவினுடையவர்கள் தங்கள்* ***மாம்சத்தையும் அதின் ஆசை இச்சைகளையும் சிலுவையில் அறைந்திருக்கிறார்கள்.***

*கலா 5:16 பின்னும் நான் சொல்லுகிறதென்னவென்றால், ஆவிக்கேற்றபடி நடந்துகொள்ளுங்கள், அப்பொழுது* ***மாம்ச இச்சையை நிறைவேற்றாதிருப்பீர்கள்.***

*17 மாம்சம் ஆவிக்கு விரோதமாகவும், ஆவி மாம்சத்துக்கு விரோதமாகவும் இச்சிக்கிறது; நீங்கள் செய்யவேண்டுமென்றிருக்கிறவைகளைச் செய்யாதபடிக்கு, இவைகள் ஒன்றுக்கொன்று விரோதமாயிருக்கிறது.*

*கலா 5:24* சொல்லுகிறது, **விசுவாசிகள் தங்கள் மாம்சத்தை சிலுவையில் அறைந்திருக்கிறார்கள்.** இது இயேசு கிறிஸ்துவால் நடத்தி முடிக்கப்பட்ட ஒரு சம்பவம். இது நாம் செய்ய வேண்டியதில்லை நம்மால் செய்ய முடியாது.

*பின் கலா 5: 16,17* சொல்லுகிறது " **ஆவிக்கேற்றபடி நடந்து கொள்ளுங்கள்**, அப்போது மாம்ச இச்சையை நிறைவேற்றாதிருப்பீர்கள்".

*கலா 5:24* ன் படி ஒரு விசுவாசி ஏற்கனவே மாம்சத்தை சிலுவையில் அறைந்திருக்கிறார். அப்படியானால் பின் ஏன் அவர் மாம்ச இச்சையை நிறைவேற்றாதிருப்பதற்காக , சோதனையில் விழாமல் இருப்பதற்காக ஆவிக்கேற்றபடி நடந்து கொள்ள வேண்டும்? நாம் வேறொரு வேத பாடத்தில் " மாம்சம் " என்பதை பற்றி படிப்போம். இப்போது ஒரு சுருக்கமான விளக்கத்தை பார்ப்போம்.

மாம்சத்துக்கு இரண்டு விதமான நிலமைகள் இருக்கிறது. 1. " **மாம்சத்தின் பாவ நிலமை** ". 2. **மாம்சத்தின் சுய நிலமை. மாம்சத்தின் பாவ நிலமை**யை **இயேசுவின் சிலுவை** சீர்செய்கிறது. **மாம்சத்தின் சுய நிலமை**யை **பரிசுத்த ஆவியானவர்** சீர் செய்கிறார். நாம் பரிசுத்த ஆவியின் வழிநடத்துதலின் படி பின் தொடர்ந்து, நம்முடைய செய்கைகளை செய்து, வாழ்ந்து இருக்கும்போது, " ஆவிக்கேற்றபடி நடந்து கொள்கிறோம்" என்று அர்த்தம். அப்படி நடக்கும்போது மாம்ச இச்சையை - சோதனைக்குள் விழ வைக்கும் ஒரு முக்கியமான காரியத்தை - நாம் நிறைவேற்றாமல் இருக்க முடியும்.

## 11. சோதனையான இடத்தில் இருந்து விலகி ஓடுங்கள்.

*1கொரி 6:18 வேசித்தனத்திற்கு விலகியோடுங்கள். மனுஷன் செய்கிற எந்தப் பாவமும் சரீரத்திற்குப் புறம்பாயிருக்கும்; வேசித்தனஞ் செய்கிறவனோ தன் சுயசரீரத்திற்கு விரோதமாய்ப் பாவஞ்செய்கிறான்.*

எதாவது ஒன்று நம்மை சோதனையில் விழ வைக்குமா, அதை விட்டு விலகி ஓடுங்கள். எது நம்மை சோதனையில் விழ வைக்குமோ, அதை நம்மை விட்டு உடனே தூரமாக வியுங்கள். யோசேப்பு ஓடியதால் அந்த சோதனையில் இருந்து தப்பினான்.

## 12. திருப்தியோடு இருங்கள்.

*கொலோ 2:10 மேலும் சகல துரைத்தனங்களுக்கும் அதிகாரத்துக்கும் தலைவராயிருக்கிற அவருக்குள் நீங்கள் பரிபூரணமுள்ளவர்களாயிருக்கிறீர்கள்.*

பாவத்தில் விழுவதற்கான ஒரு முக்கிய காரணம் " **திருப்தியின்மை** ". ஆதாமும், ஏவாளும் பாவம் செய்ததன் ஒரு காரணம், ' தேவன் உங்களுக்கு எல்லாம் தரவில்லை, சில நன்மைகளை உங்களிடத்தில் இருந்து தடுத்து வைத்திருக்கிறார் " என்ற அதிருப்தி எண்ணத்தை சாத்தான் அவர்கள் மனதில் போட்டது.

*1தீமோ 6:9 ஐசுவரியவான்களாக விரும்புகிறவர்கள் சோதனையிலும் கண்ணியிலும், மனுஷரைக் கேட்டிலும் அழிவிலும் அமிழ்த்துகிற மதிகேடும் சேதமுமான பலவித இச்சைகளிலும் விழுகிறார்கள்.*

தேவன் வாழ்க்கையில் உங்களுக்கு தந்திருப்பதை வைத்து திருப்தி படுங்கள். அதற்கும் மேலாக வேண்டுமென்றால், வேதாகமம் சொல்லுகிற வழிகளில் தேடுங்கள். திருப்தியோடு இருத்தல், சோதனைக்கு எதிரான நல்லதொரு ஆயுதம்.

# தேவன் ஒரு புதிய உடன்படிக்கையின் விசுவாசியை சோதிக்க மாட்டார்.

## சோதனைக்காரன் யார்?

*மத் 4:3 **அப்பொழுது** சோதனைக்காரன் அவரிடத்தில் வந்து: நீர் தேவனுடைய குமாரனேயானால், இந்தக் கல்லுகள் அப்பங்களாகும்படி சொல்லும் என்றான்.*

*1தெச 3:5 ஆகையால், நான் இனிப் பொறுத்திருக்கக்கூடாமல், எங்கள் வேலை வீணாய்ப் போகத்தக்கதாகச் சோதனைக்காரன் உங்களைச் சோதனைக்குட்படுத்தினதுண்டோவென்று, உங்கள் விசுவாசத்தை அறியும்படிக்கு, அவனை அனுப்பினேன்.*

வேதாகமம் தேவனை **" சோதனைக்காரன் "** என்று அழைக்க வில்லை. ஆனால் வேதம் **சாத்தானைத்தான் " சோதனைக்காரன் " என்று அழைக்கிறது.** வேதாகம் சாத்தானுக்கு கொடுத்திருக்கும் பெயரை தேவனுக்கு உபயோகிப்பது மாபெரும் தவறு அல்லவா? வேதம் தெளிவாக சொல்லியிருக்கிறது " சோதிப்பது " சாத்தானுடைய வேலை. தேவனுடைய வேலை அல்ல. ஆகவே தேவனை சோதிப்பவர், என்னை சோதித்தார் என்று சொல்வது வேத வசனத்துக்கு எதிரானது. சாத்தானை மகிமைப்படுத்துவது.

## எங்களைச் சோதனைக்குட்படப்பண்ணாமல்,...

*மத் 6:13 எங்களைச் சோதனைக்குட்படப்பண்ணாமல், தீமையினின்று எங்களை இரட்சித்துக்கொள்ளும், ராஜ்யமும், வல்லமையும், மகிமையும் என்றென்றைக்கும் உம்முடையவைகளே, ஆமென், என்பதே.*

சோதனையின் மூல காரணர் தேவன் அல்ல.*( யாக் 1:13 ).* சாத்தான் தான் சோதனைக்காரன் என்று அழைக்கப் படுகிறான் *( மத் 4:3; 1 தெச 3:5 ).* அப்படியானால் பிதா நம்மை சோதனைக்குட்படப்பண்ணாமல் இருக்கும்படியாக ஜெபிக்கும்படியாக, ஏன் இயேசு கற்பிக்கிறார்? இந்த ஜெபம் நாம் தீமையில் இருந்து விடுவிக்கப்படும்படியாக தேவனிடம் வழிகாட்டுதலை கேட்கிற ஒரு ஜெபம். நம் தேவன் நம்முடைய அன்றாட ஆகாரத்தை எப்படி தடுத்து வைக்க மாட்டாரோ அது போலவே நம்மை சோதனைக்குட்படப்பண்ணவும் மாட்டார். ஆனால் *யாக்கோபு 4:2* ல் *" நீங்கள் விண்ணப்பம்பண்ணாமலிருக்கிறதினாலே, உங்களுக்குச் சித்திக்கிறதில்லை."* என்று குறிப்பிடப்பட்டுள்ள படி, ***" எங்களுக்கு வேண்டிய ஆகாரத்தை இன்று எங்களுக்குத் தாரும்" "எங்களைச் சோதனைக்குட் படப்பண்ணாமல்"*** என்பது போன்ற விண்ணப்பங்கள் எல்லாம், நமக்கு ஏற்கனவே ஆயத்தமாக வைக்கப்பட்டிருக்கின்றவற்றை நாம் கேட்டு பெற்றுக்கொள்கிற விண்ணப்பங்கள் ஆகும். இது போன்ற விண்ணப்பங்கள், தேவன் நமக்காக ஏற்கனவே ஆயத்தமாக வைத்திருக்கிற வாக்குத்தத்த பாதுகாப்பை *( சங் 91)* நினைவூட்டி, நம்முடைய விசுவாசத்தை வெளிப்படுத்தி நமக்கு உரிமையானவற்றை பெற்றுக்கொள்ளும்படியாக செய்கின்றன.

## சோதிக்கப்படுகிற எவனும், நான் தேவனால் சோதிக்கப்படுகிறேன் என்றுசொல்லாதிருப்பானாக;

*யாக் 1:13 சோதிக்கப்படுகிற எவனும், நான் தேவனால் சோதிக்கப்படுகிறேன் என்று சொல்லாதிருப்பானாக; தேவன் பொல்லாங்கினால் சோதிக்கப் படுகிறவரல்ல, ஒருவனையும் அவர் சோதிக்கிறவருமல்ல.*

" நான் புடமிடப்படும்படியாக தேவன் என்னை எந்த பிரச்சினையில் தள்ளினார் "......." நான் விசுவாசத்தில் பெலப்பட்டு இன்னும் வல்லவனாக ஆகும்படியாக தேவன் எனக்கு இந்த சோதனையை, நோயை, உபத்திரவத்தை, பாடுகளை, எதிர்ப்பை, சூழ்நிலையை தந்தார் "..... இப்படிப்பட்ட வாக்கியங்களை பல விசுவாசிகளும் ஊழியக்காரர்களும் அடிக்கடி சொல்லுவதை நாம் கேட்பதுண்டு. இத்தகைய வாக்கியங்கள் உண்மையில் பரிசுத்த ஆவியானவரை துக்கப்படுத்துகின்றனவையாகும். பழைய ஏற்பாட்டுக்கும் புதிய ஏற்பாட்டுக்கும் உள்ள வேறுபாட்டை, வேதாகம உடன்படிக்கைகளை, நியாயப்பிரமாணத்தை, கிருபையை, மீட்பை, கடிந்துகொள்ளுதலை, பிராயச்சித்தபலியை.... பற்றி சற்றும் அறியாதவர்கள்தான் இந்த மாதிரியான வாக்கியங்களை சொல்லுவார்கள். இதை சரியாக புரிந்து கொள்ளும்படியாக இது சம்பந்தப்பட்ட சில வேத வசனங்களை எடுத்து தியானிப்போம்.

*மாற் 1:12 உடனே ஆவியானவர் அவரை வனாந்தரத்திற்குப் போகும்படி ஏவினார்.*

வனாந்தரத்தில் சோதிக்கப்படும்படியாக செல்வதற்காக ஆவியானவர் இயேசுவை ஏவினார். இயேசு, நாம் சோதனைக்குடப்பண்ணாதபடிக்கு ஜெபிக்கும்படியாக சொன்னார் *( மத் 6:13 ).* இயேசு நமது சோதனையை நமக்காக சகித்ததனால், நாம் சோதிக்கப்படுவது தேவனுடைய திட்டத்தின் ஒரு பகுதி அல்ல. ஆனால் அவர் இரக்கமும் உண்மையுமுள்ள பிரதான ஆசாரியன் ஆகுவதற்காக, நம்மைப்போல எல்லாவிதத்திலும் சோதிக்கப்பட வேண்டியதாக இருந்தது *( எபி 2:17,18 ).* மேலும், நாம் தேவனுடைய நீதியாகும்படியாக அவர் நமக்காக பாவமானார் *( 2 கொரி 5:21 ).* அப்படியானால் இதன் அர்த்தம், நாமும் பாவமாக வேண்டும் என்பதா? நிச்சயமாக இல்லை. இயேசு நம்முடைய சோதனைகளை சுமந்து பாடுபட்டதனாலே நாம் அவற்றை சுமந்து

பாடுபட வேண்டிய அவசியம் இல்லை. நாம் சோதிக்கப்படுவோம், ஆனால் தேவன் நம்மை பொல்லாங்கினால் சோதிப்பது இல்லை *( யாக் 1:13 ).*

இயேசு நம்முடைய பாவங்களுக்காக மரித்ததனால், நாம் அவற்றுக்கான தண்டனையை செலுத்த வேண்டியதில்லை *( ரோமர் 6:23 ).*

இயேசு நம்முடைய நோய்களை சுமந்ததனால், நாம் இனி அவற்றை சுமக்க வேண்டியதில்லை, ஆரோக்கியமாக இருக்கலாம். *( மத் 8:17, 1 பேதுரு 2:24 )*

இயேசு நமக்காக தரித்திரன் ஆனதால், நாம் இனி தரித்திரன் ஆக வேண்டியதில்லை, நாம் ஐசுவரியவான ஆக முடியும் *( 2 கொரி 8:9 ).*

**இந்த இடத்தில், இயேசு சோதிக்கப்பட்டதால் நாம் சோதனைக்குட்படப் பண்ணப்படுவதில்லை.**

## தேவன் ஆபிரகாமை சோதித்தது...

*ஆதி 22:1 இந்தக் காரியங்கள் நடந்தபின்பு, தேவன் ஆபிரகாமைச் சோதித்தார்; எப்படியெனில், அவர் அவனை நோக்கி: ஆபிரகாமே என்றார்; அவன்: இதோ அடியேன் என்றான்.*

இன்றைய உலக வழக்கப்படி, சோதனை என்பது " பாவம் செய்யும்படியாக தூண்டுதல் " என்ற அர்த்தத்தில் பார்க்கப்படுகிறது. ஆனால் தேவன் ஒருபோதும் இந்த அர்த்தத்தில் யாரையும் சோதிப்பது இல்லை. இதன் உண்மையான அர்த்தம் **" தேவன் ஆபிரகாமை பரிசோதித்தார் "**( engligh bible; **" tried "** ) *( எபிரேயர் 11:17 ).* இந்த அர்த்தத்தில்தான் **ஆதியாகமம்** 22:1 ல் எபிரேய வார்த்தை " நாக்கா " ( prove, try, to test ) உபயோகப்படுத்தப்பட்டுள்ளது. ஆகவே இந்த அர்த்தத்தை மனதிலாக்கி பார்க்கும்போது **ஆதியாகமம்** 22:1 ம் யாக்கோபு 1:13 ம் ஒன்றுக்கொன்று முரண்பாடான வசனங்கள் அல்ல, மாறாக அவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள அர்த்தங்கள் வேறு என மனதிலாக்கிக்கொள்ளலாம்.

## உபத்திரவம், பாடுகள், கஷ்டங்கள்.

*யாக் 1:2 என் சகோதரரே, நீங்கள் பலவிதமான சோதனைகளில் அகப்படும்போது, 3 உங்கள் விசுவாசத்தின் பரீட்சையானது பொறுமையை உண்டாக்குமென்று அறிந்து, அதை மிகுந்த சந்தோஷமாக எண்ணுங்கள்.*

*யாக் 1:12 சோதனையைச் சகிக்கிற மனுஷன் பாக்கியவான்; அவன் உத்தமனென்று விளங்கினபின்பு கர்த்தர் தம்மிடத்தில் அன்புகூருகிறவர்களுக்கு வாக்குத்தத்தம் பண்ணின ஜீவகிரீடத்தைப் பெறுவான்.*

பாடுகள், சோதனைகள், உபத்திரவங்கள் வரும், அவற்றை தேவனுடைய ஆலோசனையின் படி சகிப்பதனால் மிகுந்த உபயோகங்களை பெற்றுக்கொள்ளலாம். ஆனால் அவை தேவனிடம் இருந்து வருபவை அல்ல. இந்த பாடுகள் எல்லாம் தேவனிடம் இருந்து வருகின்றன என்று நாம் நினைத்தால் அவற்றுக்கு எதிர்த்து நிற்பதற்கு பதிலாக அவற்றுக்கு நாம் அடிபணிந்து விடுவோம். இது சாத்தானுக்கு அனுகூலமாகி விடும். ஆனால் ***யாக்கோபு** 4:7* சொல்லுகிறது, *" தேவனுக்குக் கீழ்ப்படிந்திருங்கள்; பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள்,"* என்று. இந்த விஷயத்தில் சாத்தான் நம்முடைய சிந்தனைகளை மாற்றி, அவன் நம்முடைய வாழ்க்கையில் கொண்டு வருகிற பிரச்சினைகளுக்கு நாம் கீழ்ப்படியும்படி செய்தால், நாம் அவனுடைய அடிமைகளாகி விடுவோம் *( ரோமர் 6:16 ).* இதை நம்முடைய குழந்தைகள் வளர்ந்து பெலப்படுவதற்கு ஒப்பிடலாம். அவர்கள் நடக்கத் தொடங்கும்போது, அவர்கள் விழுந்து எழுவதனால் அவர்களது மூட்டுகளும் தசைகளும் நன்றாக பெலப்படும் என்பது நமக்கு தெரியும். அதற்காக அவர்கள் பெலப்பட வேண்டும் என்பதற்காக நாம் அவர்களை கீழே விழும்படியாக தள்ளி விடுவோமா ? ஒரு போதும் செய்ய மாட்டோம். அது போலத்தான் பலவித இன்னல்களும், பிரச்சினைகளும், பாடுகளும் நமக்கு மிகுந்த அனுபவத்தையும், பெலத்தையும், அவற்றை எதிர்கொள்ளும் பொறுமையையும் தரும். ஆனால் அதற்காக தேவன் சோதனகளை தருவது இல்லை.

## நம்மை பூரணப்படுத்துவது எது ?

*ரோம 5:3 அதுமாத்திரமல்ல, உபத்திரவம் பொறுமையையும், பொறுமை பரீட்சையையும், பரீட்சை நம்பிக்கையையும, உண்டாக்குகிறதென்று நாங்கள் அறிந்து,*

உலகத்தில் உபத்திரவங்கள் இருக்கிறது என்பது உண்மை. இது தேவன் உபத்திரவத்தை சிருஷ்டித்தார் என்பதனால் அல்ல, தேவனுடைய ராஜ்யத்துக்கும் சாத்தானுடைய ராஜ்யத்துக்கும் ஒரு போராட்டம் நடந்து கொண்டிருக்கிறது என்பதனால். இந்த போராட்டத்தில், நாம் விசுவாசத்தோடு போராடும்போது, தேவன் நமக்கு மகத்தானா வெற்றியை தருவார். இந்த போராட்டத்தின் மூலம் கிடைத்த வெற்றியினால், நாம் போராட்டத்துக்கு முன்பு இருந்ததை விட வல்லவர்களாக ஆகிறோம். இது ஒரு நாட்டின் படை போருக்கு செல்லுவதை போன்றது. அவர்கள் எதிரி படையோடு போராடி வெற்றி பெற்றால் அவர்களுக்கு மிகுந்த செல்வங்களும், பதவி உயர்வும், மெடல்களும், அனுபவமும் கிடைக்கும். ஆனால் அவர்கள் எதிரி படைகளை பார்த்தவுடன், " ஆஹா! இதோ எனக்கு செல்வங்களையும், பதவி உயர்வையும், மெடல்களையும், அனுபவங்களையும் தருகிறவர்கள் வந்திருக்கிறார்கள் " என்று ஓடி சென்று அவர்களை வரவேற்றால் என்ன நடக்கும்? அவர்கள் கொல்லப்படுவார்கள். முதலில் எதிரியோடு போராட வேண்டும், வெற்றி பெற வேண்டும், அதன் பின் மாத்திரமே செல்வங்களும், பதவி உயர்வும், சம்பள உயர்வும், மெடல்களும், அனுபவமும் கிடைக்கும். எதிரி நமக்கு

ஆசீர்வாதம் தருவதற்காக வருவது இல்லை; ஆனால் அவனோடு போராடி நாம் வெற்றி பெறும்போது ஆசீர்வாதங்களை பெற்றுக்கொள்ள முடியும்.

இது போன்றே, உபத்திரவங்களும், சோதனைகளும், பாடுகளும், எதிர்ப்புகளும் தேவனிடம் இருந்து வரும் ஆசீர்வாதங்கள் அல்ல. அவைகள், நம்முடைய வாழ்க்கையில் இருந்து தேவனுடைய வார்த்தையை திருடிச்செல்லும்படியாக வருகிற சாத்தானின் தாக்குதல்கள் *( மத்தேயு 13:21 ).* ஆனாலும் இந்த பிரச்சினைகளை எதிர்த்து நின்று போராடி வெற்றி பெறும்போது அதில் இருந்து சில ஆசீர்வாதங்களை பெற்றுக்கொள்ள முடியும். பிரச்சினைகளும், சோதனைகளும், பாடுகளும் நம்மை பூரணப்படுத்துவது இல்லை. **தேவனுடைய வார்த்தையே நம்மை பூரணப்படுத்தி, நம்மை எல்லா விதமான நற்கிரியைகளையும் செய்வதற்கு தகுதி உள்ளவர்கள் ஆக்குகிறது.**

*2தீமோ 3:16 வேதவாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது; தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும், எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக, 17 அவைகள் உபதேசத்துக்கும், கடிந்துகொள்ளுதலுக்கும், சீர்திருத்தலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது.*

*2 Tim. 3:17 That the man of God may be perfect, throughly furnished unto all good works.*

தேவனுடைய வார்த்தையின் நோக்கத்தை அது நிறைவேற்றுவதற்கு ( தேவனுடைய மனுஷனை " perfect " **பூரணன்** ஆக்குவதற்கு ) பிரச்சினைகளின் உதவி அதற்கு தேவை இல்லை. அது எதற்காக அனுப்பப்பட்டதோ அதை வாய்க்க செய்யும். *(ஏசாயா 55:11).* தேவனுடைய மனுஷனை " perfect " பூரணன் ஆக்க தேவன் உபயோகிப்பது " **தேவனுடைய வார்த்தையை".** ஆனாலும் மதமும், தேவனை அறியாத நியாயப்பிரமாண போதகர்களும் *( 1 தீமோ 1:7 )* போதிப்பது, " தேவனுடைய வார்த்தை மாத்திரம் மனுஷனை தேறினவன் ஆக்குவதற்கு போதாது, அதோடு கூட பிரச்சினைகளும், பாடுகளும், சோதனைகளும் சேர்ந்துதான் தேவ மனுஷனை பூரணப்படுத்தும் ". இவர்கள் தேவனுடைய வசனத்தோடு பலவற்றை கூட்ட முயற்சிக்கிறார்கள். இதனால் பல அருமையான விசுவாசிகளும் சோதனைகளையும் வேதனைகளையும் எதிர்த்து வெற்றி பெறாமல் அதனால் பலவிதமான துன்பங்களை அனுபவிக்க வேண்டி வருகிறது. இந்த பழி அனைத்தும் தேவன் மேல் போடப்படுகிறது.

## யோபுவின் பொறுமை.

பலரும் யோபுவின் பாடுகளை போல் தங்களது பாடுகளை ஒப்பிடுகிறார்கள். இதில் சில குறிப்பிட்ட காரியங்களை மாத்திரம் பார்ப்போம்.

1. யோபுவை போல தேவன் என்னை புடமிடுகிறார் என்று சொல்பவர்கள், யோபுவை போல ஆடு,மாடு, ஒட்டகங்களுடன் ஐசுவரியவானாக இருக்க வேண்டும் அல்லவா?.

2. யோபு ஒரு உடன்படிக்கைக்கும் உட்படாதவர்.

3. யோபு தானே, தான் பேசியதனைத்தும் அலப்பினது என்கிறார். *யோபு 42:3 அறிவில்லாமல் ஆலோசனையை மறைக்கிற இவன் யார்? ஆகையால் நான் எனக்குத் தெரியாததையும், என் புத்திக்கு எட்டாததையும், நான் அறியாததையும் அலப்பினேன் என்கிறேன்.*

4. யாக்கோபு 5:11 ல் உபத்திரவத்தின் வேளையில் யோபுவின் பொறுமையை குறித்து சொல்லப்பட்டிருக்கிறது. யோபு குணமாக்கப்பட்டார்.

## தேவன் பரீட்சை ( examination ) வைத்து அதில் அதில் பாஸ் ஆகுகிறவர்களை மாத்திரம் ஏற்றுக்கொள்வதில்லை.

ஒரு புதிய உடன்படிக்கையின் விசுவாசியை தேவன் ஏற்றுக்கொள்வது பரிசோதனைகள், தேர்வுகள், சோதனைகள், வைத்து அல்ல. தேவன் ஒரு புதிய ஏற்பாடு விசுவாசியை ஏற்றுக்கொள்வது " இயேசுவுக்குள் " மாத்திரமே. தேவன் ஒருவரை ஏற்றுக்கொள்வதற்காக பரீட்சை வைத்தால் அதில் ஒரே ஒருவர் மாத்திரமே தேர்ச்சி பெறுவார், அவர் பெயர் " இயேசு கிறிஸ்து ". மீதி அனைவருமே தோற்றுப்போவார்கள்.

*Ephes. 1:6 To the praise of the glory of his grace, wherein he hath made us accepted in the beloved. யோவான்; 1:12, 3:16,36*

"beloved" - JESUS CHRIST. *( மத் 3:17, 17:5, லூக் 3:22, 2 பேதுரு 1:17 ).*

## ஒரு விசுவாசி கஷ்டப்பட தேவையற்றதான சில காரியங்கள்;

1. பாவத்தோடு கஷ்டப்பட வேண்டியதில்லை. *( மத்; 1;21, 26;28, 2 கொரி; 5;17-21, ரோமர்; 1;21-32, 1 கொரி; 6;9-11, )*

2. நோயோடு கஷ்டப்பட வேண்டியதில்லை. *( ஏசா; 53, மத்; 8;16-17, யோவான்; 10;10, அப்; 10;38, யாக்; 5;14-16, 1 பேது; 2;24.)*

3. வறுமையோடும் வியாபாரத்தில் தோல்வியோடும் கஷ்டப்பட வேண்டியதில்லை. *( சங்; 1;3-4, 23;1-6, 34;9-10, 37;1-8, 84;11, )*

4. மோசமான பழக்கங்களோடு கஷ்டப்பட வேண்டியதில்லை. *( ரோமர்; 6;14-23, 8;1-13, 1 கொரி; 6;9-11, 2 கொரி; 5;17-21, கலா; 5;15-26,)*
5. ஆவிக்குரிய வல்லமை இல்லாமல் கஷ்டப்பட வேண்டியதில்லை. *( மத்; 17;20, மாற்கு; 9;23, 16;15-20, லூக்கா; 24;49, யோவான்; 14;12-15, )*
6. ஜெபத்தில் தோல்வியோடு கஷ்டப்படவேண்டியதில்லை. *( மத்; 17;20, 21;22, மாற்கு; 9;23, 11;22-24, யோவான்; 14;12-15, எபி; 11;6, )*

## ஆனால் உங்கள் விசுவாசத்துக்காக, சுவிசேஷத்துக்குக்காக கஷ்டம் அனுபவித்தால் அதற்காக பெருமைப்படுங்கள்.

*1 பேதுரு 1:7, 1 பேதுரு 4;12-16.*

*1பேது 4:16 ஒருவன் கிறிஸ்தவனாயிருப்பதினால் பாடுபட்டால் வெட்கப்படாமலிருந்து, அதினிமித்தம் தேவனை மகிமைப்படுத்தக்கடவன்.*
பல விசுவாசிகள் பாவத்தினால், மோசமான பழக்க வழக்கங்களினால், உடற்பயிற்சி குறைவினால், கடுமையான வேலைப்பளுவினால், முறையற்ற ஆகாரத்தினால், ஒழுக்கம் இல்லாய்மையினால், முறையான திட்டமிடுதல் இல்லாததினால், தவறான முடிவுகள் எடுப்பதினால் கஷ்டப்படுகிறார்கள். முடிவில், அவர்கள் விதைத்ததை அறுவடை செய்யும்போது அந்த பழியை தேவன் மேல் போட்டு விடுகிறார்கள். தேவன் அவர்களை சோதித்தார், பரிசோதனை செய்தார் என்று சொல்லி விடுகிறார்கள். இது உண்மை அல்ல. ஒரு விசுவாசிக்கு வேதாகமம் அனுமதித்திருக்கிற கஷ்டம் " **சுவிசேஷத்திற்காக கஷ்டம்** " மாத்திரமே. அதை **சகிக்கிற** மனுஷன் " **பாக்கியவான் "**. மற்ற அனைத்து உபத்திரவங்களும், சோதனைகளும், பாடுகளும் சாத்தானிடம் இருந்தும், மனிதர்களிடம் இருந்தும், நம்மிடம் இருந்தும் வருகிறவைகளே. அதை எதிர்த்து நிற்க வேண்டும். தேவன் தருகிறார், அனுமதிக்கிறார் என்று சகித்துக்கொண்டிருக்க வேண்டியதில்லை. அப்படி ஏமாற்றப்பட்டு சகிப்பதனால்தான் பல ஊழியக்காரர்களும், விசுவாசிகளோடும் துக்கம், வறுமை, நோய், பெலமின்மை, தோல்வி, விரக்தி போன்ற பல சாத்தானுடைய தந்திரங்களால் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். அவர்களது பாஷையில் " சோதனைகளை சகித்துக்கொண்டிருக்கிறார்கள் ". ஆனாலும் நம் தேவன் கருணை உள்ளவர். அவர் இவற்றில் இருந்து தப்பிச்செல்ல ஒரு வழியை காண்பிப்பார். அவர் இரக்கமும் உண்மையும் உள்ள பிரதான ஆசாரியன்.

அன்பான சகோதரா/சகோதரி ! சோதனையைப்பற்றி வேதாகம் முழுவதிலும் இருந்து பல சத்தியங்களை அறிந்து கொண்டீர்கள். இந்த சத்தியத்தில் நிலைத்து நிற்பீர்களானால் எந்த சக்திக்கும் உங்களை பாவத்தில் வீழ்த்த முடியாது. மீண்டும் மீண்டும் சோதனையில், பாவத்தில் வீழ்ந்து வருத்தப்பட அவசியம் கிடையாது. சுவிசேஷத்துக்காக, உங்கள் விசுவாசத்துக்காக, இயேசுவுக்காக வருகிற உபத்திரவங்களை இந்த அறிவோடு நீங்கள் பொறுமையாக சகிக்கலாம். நீங்கள் விசுவாசிக்கும் உங்கள் தேவன் உங்களை எவ்விதத்திலும் சோதிக்கவே மாட்டார். இதில் அசைக்க முடியாத உறுதியுடன் இருங்கள். தேவ ஜனத்தை அறியாமையினால் வேதனைக்குள்ளாக்குபவர்களுக்கும், ஏமாற்றப்பட்டு வேதனையோடு இருப்பவர்களுக்கும் இந்த சத்தியத்தை சொல்லிக்கொடுங்கள். உங்கள் இலட்சியப்பாதையில் முன்னேறி தேவன் உங்கள் வாழ்க்கையில் வைத்திருக்கும் திட்டத்தை நிறைவேற்றுங்கள். அடிக்கடி சாத்தானால் தோற்கடிக்கப்பட்ட ஒரு வாழ்க்கை வாழ அவசியம் இல்லை. சோதனை வரும்போது அதை வல்லமையாக எதிர் கொள்ளுங்கள். உங்களால் ஒரு வெற்றிகரமான வாழ்க்கை இயேசுவுக்குள் வாழ முடியும்.
*யாக் 4:7 ஆகையால், தேவனுக்குக் கீழ்ப்படிந்திருங்கள்; பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள், அப்பொழுது அவன் உங்களைவிட்டு ஓடிப்போவான்.*
**சுவிசேஷத்துக்காக, இயேசுவுக்காக, விசுவாசத்துக்காக வரும் எந்த உபத்திரவங்களையும், பாடுகளையும், துன்பங்களையும் ( சோதனைகளையும் ) சகிக்க தயாராக இருங்கள்.**
**சாத்தானின் தந்திரத்தால் வரும் பாவம் செய்ய தூண்டுதல், வறுமை, துன்பம், துயரம், கண்ணீர், நோய், மரணம் போன்றவற்றை ( சோதனைகளை ) எதிர்க்க தயாராக இருங்கள்.**

ஆசீர்வாதமாக இருங்கள்.
ஆமென்.

BRO. D.VERGIN KUMAR.
For any doubts, clarifications kindly contact me in deeveekumar@yahoo.com Ph; 25572195, 99663557. Your comments are welcome.
**Resources;** Dakes bible commentary, Andrew Wommack bible commentary, Adam Clarke's Bible commentary, Vine's expository Dictionary of Bible words, Strong's Bible concordance, Thayer's Greek-English Lexicon, Easton illustrated Bible Dictionary, The Spiritual man - By Watchman nee, Identity in Christ - By Andrew Wommack, The Power of sin - By Bill Gillham, Webster's Dictionary, etc.. All bible quotes are from King James Version bible.